**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.4/2026**

**Deposition of Witness for Prosecution PW 8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Dr. சிவபாலன் | Father's Name | : | பழனிதுரை |
| Village | : | திருவாரூர் | Taluk | | திருவாரூர் |
| Calling | : | | Age | : | 49 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 07th day of August 2026.**

**(A1 & A2 absent. For A1 & A2 petition U/s. 355 BNSS is filed and allowed).**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அறுவை சிகிச்சை துறையில் துறை தலைவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 31.10.2018 அன்று திருவாரூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் பணியிலிருந்தபோது இரவு 10.15 மணியளவில் ஜமால், வயது 65 (ஆண்) த/பெ. ரஹமத்துல்லா என்பவரை அவரது மகன் அப்துல்லா என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்து உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். அவர் சுயநினைவுடன் இருந்தார். அவரிடம்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.08.07 14:43:56 +0530

விசாரித்தபோது அவரை 31.10.2018 இரவு 8.00 மணியளவில் கண்கொடுத்தவணிதத்தில் அடையாளம் தெரிந்த 3 நபர்கள் அரிவாள், மரக்கட்டை, இருமப்பு கம்பு கொண்டு தாக்கியதாக கூறினார். அவருக்கு நடு தலையில் 7x1x1 செ.மீ. அளவில் வெட்டு காயம் இருந்தது. அவருக்கு தேவையான சிகிச்சை அளிக்கப்பட்டு 03.11.2018 அன்று மதியம் 2 மணியவில் மருத்துவமனையைவிட்டு விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று சான்று அளித்தேன். மருத்துவமனை அவசர சிகிச்சை பிரிவில் வழங்கப்பட்ட விபத்து பதிவேடு **அ.சா.ஆ.3**. நான் வழங்கிய Medico Legal Opinion **அ.சா.ஆ.4**. மேற்சொன்ன நபருக்கு தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் அருவாளால் தாக்கப்பட்டால் மேற்சொன்ன காயம் ஏற்பட வாய்ப்புண்டு. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

அ.சா.ஆ.3 ல் Laceration Injury என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. வெட்டுக் காயம் என்பது Cut injury என்றால் தமிழில் சரியாக சொல்ல தெரியவில்லை. அ.சா.ஆ.3 ல் அருவாள், மரக்கட்டை, இரும்பு ராடு போன்ற ஆயுதங்கள் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. அதில் அடையாளம் தெரிந்த 3 நபர்கள் தாக்கியதாக

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.08.07 14:44:03 +0530

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி, பெயர் குறிப்பிட்டு சொல்லவில்லை. போலீசார் என்னை விசாரித்தபோது ஆயுதங்கள் எதையும் காட்டி கருத்துரை பெற்றார்களா என்றால் இல்லை. மேற்சொன்ன காயங்கள் ஒரு நபர் கூர்மையான பகுதியில் மோதி கீழே விழும்போது ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரி.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.08.07 14:44:09 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.